சுற்றுநிருபம்- ~~43/99(i)~~ 02/2007

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடமாகாணம்
24.12.2007

வடமாகாணத்திலுள்ள
சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விதிகள்
## பதவி நிர்ணயங்களுக்கான ஆவணங்களை சமர்ப்பித்தல்

மேற்படி விடயம் தொடர்பாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வடக்கு கிழக்கு மாகாணம் அவர்களின் 43/99 இலக்க 26.06.1999 ம் திகதிய சுற்றுநிருபத்தின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

1. மேற்படி சுற்றறிக்கையின் பிரிவு 1 இன்படியான கூட்டுறவு ஊழியர் நடைமுறை விதிக்கோவை பின் இணைப்பு vii படிவம் பூரணப்படுத்தப்படும் போது பதவி வெற்றிடமாகிய விதம் விபரமாக குறிப்பிடப்பட்டிருப்பதுடன், கடைசி முறையாக அப்பதவியை வகித்தவரின் பெயர் **கட்டாயமாக** சுட்டிக்காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

2. பிரிவு 17 இன் படியான நியமனத்திற்கான முன்னங்கீகாரத்தைப் பெறுவதற்கான இயக்குநர் சபை தீர்மானமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்

   2.1. குறித்த ஒரு பதவிக்கான ஆளணி அங்கீகாரத்திற்கான இயக்குநர் சபை தீர்மானமானத்தில் அப்பதவிக்கான நியமனமானது எத்திகதியிலிருந்து வழங்கப்பட உள்ளது என்பது கட்டாயமாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

   2.2. அத்திகதியானது ஒருவர் அப்பதவிக்கான அடிப்படைத் தகுதியை பெற்ற திகதியாகவோ அல்லது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடமிருந்து ஆளணி அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற திகதியாகவோ அல்லது அப்பதவி வெற்றிடமாகிய திகதியாகவோ இதில் எது பிந்தியதோ அத்திகதியாக அல்லது அதற்கு பிற்பட்ட ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்.

   உதாரணமாக, உள்வாரியான நியமனத்தின் போது ஒரு ஊழியர் 11வது சம்பள அளவுத்திட்டத்திற்கு நியமிக்கப்படுவதற்கான தகைமையாக 13வது சம்பள அளவுத்திட்டத்தில் 4 வருட அனுபவத்தகைமை தேவையென குறிப்பிடப்பட்டிருப்பின் அத்திகதியானது 13வது சம்பள அளவுத்திட்டத்திற்கு முறையாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 4 வருடங்களை பூர்த்தி செய்த திகதியாக அல்லது அதன் பின்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும். வெளிவாரியான நியமனத்தின் போது குறித்த திகதியில் வேண்டப்படும் அனுபவத்தகைமையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. குறித்த சுற்றறிக்கையின் இறுதிப்பந்தியில் குறிப்பிட்டபடி ஒவ்வொரு பதவிக்குமான ஆவணங்கள் தனித்தனியாக ஒவ்வொரு கோவைகளில் இடப்பட வேண்டும் என்பதை திருத்தி ஒவ்வொரு ஊழியர் தொடர்பான ஆவணங்களும் தனித்தனியாக ஒவ்வொரு கோவைகளில் இடப்பட்டு ஏனையவை ஒரு பொதுக்கோவையில் இடப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்துடன் ஒரு தடவையில் ஒரு ஊழியர் ஒரு பதவிக்கு மட்டுமே சிபாரிசு வெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி நடைமுறைகள் 01.01.2008 ம் திகதியில் இருந்து வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

12.12.2007 ம் திகதிய ஆணைக்குழு தீர்மானப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

பிரதி :
01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.